# கலாதீபம்

කලාදීබම් KALADEEPAM

ஸ்தாபிதம் 2020 01.07.2023 – 31.07.2023 தீபம் 14


## கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டுகால

# ஆரம்பக்கல்வி விழா கோலாகலமாக நடைபெற்றது

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆரம்பக்கல்வி ஆசிரிய மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆரம்பக்கல்வி விழா 14.07.2023 அன்று அதிபர் திரு ச.லலீசன் அவர்கள் தலைமையில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகியது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வடக்கு மாகாண கல்வி திணைக்கள ஆரம்பக் கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் திரு எஸ்.ஸ்ரனிஸ்லாஸ் கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் சிரேஸ்ட விரிவுரையாளர் செல்வி விக்னேஸ்வரி கந்தசாமி ஐயர் அவர்களும் சிரேஸ்ட விரிவுரையாளர் திரு து.இளங்குமரன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

அவர்களுடன் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி திரு சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களும். சிரேஸ்ட விரிவுரையாளர்களான திருமதி ஞானசக்தி கணேசநாதன், திரு கை.திலகநாதன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

ஆரம்பக்கல்வி மன்றக் காப்பாளராகிய விரிவுரையாளர் திருமதி சந்திரிகா தர்மரட்ணம் நிகழ்வுகளை நெறிப்படுத்தினார்.ஆரம்பக்கல்விமன்ற தலைவர் திருச்செல்வம் சதீஸ்குமார் வரவேற்புரையை வழங்கியதோடு நிகழ்வுகளை தொகுத்தளித்தார்.

இந்நிகழ்வில் வரவேற்பு நடனம், தமிழ், சிங்கள, ஆங்கில அபிநயப்பாடல்கள், கதை கூறல், இசையும் அசைவும், போன்ற ஆரம்பக்கல்வி போட்டி நிகழ்வுகளில் பங்குபற்றி முதல் இடத்தினைப் பெற்றுக்கொண்ட ஆசிரிய மாணவர்களது ஆற்றுகைகள் அரங்கேற்றப்பட்டன. நிறைவாக ஜீவகாருண்யம் என்ற சிறுவர் நாடகம் இடம்பெற்றது.








## கலாதீபக் குழுமம்

**காப்பாளர்**
திரு சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**பிரதம ஆசிரியர்**
செல்வி தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர், காப்பாளர் ஊடகக்கழகம்

**வள ஆலோசனை**
திரு கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
பிரதி அதிபர்
தங்கராஜா கோபாலகிருஷ்ணன்
பிரதி அதிபர்
திருமதி சத்தியா ரஞ்சித்
உபஅதிபர்

**இணை ஆசிரியர்கள்**
செல்வி மாலதி பத்மநாதன்
விரிவுரையாளர்

திரு வேலும்மயிலும் நந்தகுமார்
விரிவுரையாளர்

செல்வி சுஜீவா அருள்லிங்கம்
விரிவுரையாளர்

**பட ஒருங்கிணைப்பு**
தங்கன் இன்பதாஸ்
ஆசிரியமாணவன் - உடற்கல்வி (2021/2022)

செல்வநாயகம் கஜந்தன்
தொழில்நுட்ப உதவியாளர்

கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவராவார். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாக கொள்ளப்படமாட்டா.

**வெளியீடு**
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி: 0212230323

**மின்னஞ்சல் முகவரி**
kaladeepam.ktc@gmail.com

# கலாசாலையைத் தரிசித்தனர் 88 /89 கல்வியாண்டு அணியினர்

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் 88/89 கல்வியாண்டில் பயிற்சி பெற்று இலங்கையின் கல்வித்துறையில் பல்வேறு பதவி நிலைகளில் சேவை ஆற்றிய / ஆற்றிக்கொண்டிருக்கின்ற பெருந்தகைகள் மற்றும் புலம் பெயர்ந்து வாழும் உள்ளங்கள் என பதின்மூன்று பேர் கலாசாலையின் நூற்றாண்டை கௌரவிக்கும் முகமாக 21.07.2023 வெள்ளி கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு வருகை தந்தனர்.
கலாசாலையின் தற்போதைய விரிவுரையாளர் களையும் ஆசிரிய மாணவர்களையும் சந்தித்த இவர்கள் தமது சேவை அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர் தமது கலாசாலைக்கால நினைவுகளை மீட்கும் வண்ணம் படங்களையும் காணொளிகளையும் பகிர்ந்து கொண்டனர். 33 ஆண்டுகளின் பின்னர் இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்காக கலாசாலைக்கு வருகை தந்த இவர்கள் அனைவரும் ஒரே கோல உடையில் வருகை தந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.






# கலாதீபம்

கலாதீபம் – மின்சஞ்சிகை – கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழக வெளியீடு

කලා දීපම , e - සඟරාව, කෝප්පායි ගුරු විද්‍යාලයීය මාධ්‍ය සංගමයේ ප්‍රකාශනයකි.

The Kaladeepam - e magazine - published by media club of Kopay Teachers' College


## நமது நோக்கு

**கல்வி பற்றிய முழுமையான அதிகாரம் மாகாணங்களுக்கு வழங்கப்படவேண்டும்.**

இன்றைய நிலையில் பாடசாலைளைப் பேணும் அதிகாரம் மத்திய அரசிடமும் மாகாண அரசிடமும் காணப்படுகிறது. பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் மாகாண அரசிற்கு கல்வியைக் கையாளும் அதிகாரம் வழங்கப்பட்டது. இதன்மூலம் ஆசிரியர்களை நியமிக்கும் அதிகாரமும் மாகாணத்திற்குச் சேர்கிறது. இதனால் மாகாணம் சார்ந்த நிலையில் கல்வியை கூர்மையெடுக்கும் போக்கு எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் நினைத்தது ஒன்று நடந்ததோ வேறொன்று. கல்வியை கூர்மையாக கையாளும் நிறுவனங்களாக தேசிய பாடசாலைகள் அடையாளப்படுத்தப்பட்டன. இந்த தேசிய பாடசாலைகள் நேரடியாக மத்திய அரசினால் நிர்வகிக்கப்படுகின்றன. மத்திய, மாகாண வேறுபாடுகள் பாடசாலைகளிலும் காணப்படுவதால் கல்வியைப் பெறும் மாணவர்களிடையேயும் தேசிய பாடசாலை மாணவர் மாகாணப் பாடசாலை மாணவர் என்கிற ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன.

கல்வியில் சம வாய்ப்பு என்பதுதான் இலங்கைக் கல்வியில் இருக்கக்கூடிய தாரக மந்திரமாக உள்ள நிலையில் மத்தி மாகாணம் என்கிற வேறுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள் ஏற்றுக் கொள்ளத்தக்கவை அல்ல. தேசிய பாடசாலைகளுக்கு அதிகளவு வளங்கள் கிட்டுவதும் மாகாணப் பாடசாலைகளுக்கு குறைந்தளவு வளங்கள் கிட்டுவதும் ஏற்புடையதல்ல இதனால் தங்கள் மாகாணப் பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக்கி விடவேண்டும் என்கிற முனைப்பு, துடிப்பு பாடசாலைச் சமூகத்தினரிடம் எழுவது இயல்பானது.

பதின்மூன்றாவது திருத்தம் பற்றி கூர்மையாக பேசப்படும் இந்தக் காலகட்டத்தில் அதனை அமுலாக்குவதன் ஒரு எத்தனமாக கல்வி முற்றுமுழுதாக மாகாண கல்வி அமைச்சுக்கு வழங்கப்படவேண்டும் . இதனூடாக தங்கள் பிரதேச கல்வி குறித்த உணர்வுடன் அந்தப் பிரதேசம் தங்கள் பாடசாலைகளைக் கட்டியெழுப்ப முடியும் அதுமாத்திரம் அல்லாமல் கல்விக்கு உரமூட்டும் நிறுவனங்களாக விளங்குகின்ற ஆசிரிய அபிவிருத்தி மத்திய நிலையங்களும் மாகாண அரசிடம் வழங்கப்படவேண்டும். குறிப்பாக ஆசிரிய கல்வியியலாளர் என்ற வகுதி மாகாண அரசிற்குள் உள்வாங்கப்படவில்லை. ஆசிரிய மத்திய நிலையங்களை மாகாணத்திடம் கையளிப்பதன் மூலம் SLTES என்கிற ஆசிரிய கல்வியியலாளர் சேவை வகுதியினரையும் மாகாண ஆளணியினருள் இடம்பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.கல்வியில் பொருத்தமான மாற்றங்களை பொருத்தமான வேளைகளில் செய்வதன் ஊடாகவே கல்வியை முன்னேற்றப்பாதையில் இட்டுச்செல்ல முடியும்.

அதிபர்

**திருகோணமலை மூதூர் லிங்கபுரம் சரஸ்வதி வித்தியாலயம் மற்றும் கங்குவேலி அகத்தியர் வித்தியாலயம் – பாடசாலைகளின் மாணவர்கள் கலாசாலையைத் தரிசித்தனர்.**

திருகோணமலை மூதூரில் இருந்து யாழ்ப்பாணம் வருகை தந்த பாடசாலை மாணவர்கள் 23.07.2023 ஞாயிறு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையையும் தரிசித்தனர்

திருகோணமலை மூதூர் லிங்கபுரம் சரஸ்வதி வித்யாலயம் மற்றும் கங்குவேலி அகத்தியர் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் மாணவர்கள் தமது களப்பயணத்தின் ஒர் அங்கமாக யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தனர்

இதன்போது தமது ஆசிரியர்கள் கல்வி பயின்ற கோப்பாய் ஆசிரியர் கலாசாலையையும் தரிசித்தனர் தமது அதிபர்களான திரு தா.சதீஸ்வரன் , திரு. க. சிவகுமார் மற்றும் ஆசிரியர்களின் வழிகாட்டலில் கலாசாலையில் சிறு சிரமதான பணிகளை மேற்கொண்டதுடன் பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர்





# News in Brief - Month of July

**05.07.2023**
**Wednesday Assembly**
It was held on Wednesday 05.07.2023 at Rathilakshmi Hall under the leadership of Mr. S. Laleesan at 8:30 am. The event was chaired by Ms. Nirusha, a second year student of Tamil course. The guest speaker was Mr. Nataraja Thivendrarajah, Director, Northern Region, National Police Commission he commented on the benefits that the public can get through the Police Commission. Lecturer Mr. Vel Nandakumar also delivered the introductory speech Mrs. Vijaypalini, a second year special education student, also spoke on the topic - Handling Special Education Students

**12.07.2023**
**Wednesday's Assembly**
It was held on Wednesday 12.07.2023 at Rathilakshmi Hall under the leadership of Mr. S. Laleesan, who started at 8:30 am. The event was chaired by Mrs. Sapna, a first-year student of the Special Education Course.
Guest speaker Pandit Doctor P.S. Thirunavukarasu - Retired Deputy Principal of Kopay Teachers' College . It is noteworthy that his text was the best documentary text to review the history of the college. Mr. K. Balasanmugan delivered the introductory speech to the guest. Ms. Suthajini, a first year primary course student, spoke on the topic of female education.

**14.07.2023**
**Primary Education Day**
The Primary Education Day function was held in Kopay Teacher's College started at 9.30 am under the leadership of Principal Mr. S. Laleesan. Mr. L.Stanislaus Assistant Director of Primary Education, Provincial Education Department,NP was the chief guest for the event.Ms. Vigneswari Kandasamy Iyer, Lecturer of Jaffna National College of Education and Mr. T. Ilangumaran, Senior Lecturer of Jaffna National College of Education were the special guests. Accompanied Mr. Subramaniam Paramanandam, President of National College of Education, Jaffna. lecturers Mrs. Gnanashakthi Ganesanathan and Mr. Thilakanathan also graced the occasion.

**17.07.2023**
**The Birth of July—Aadi**
Fine Arts Forum celebrated aadi Festival was held on 17.07.2023 at 2 pm at Rathilakshmi Hall under the leadership of Principal.
Chief Guest of the event was Jaffna District chief Samurthi manager Arumugam Iragunathan participated. Siyine National college of Education senior Lecturer Mr Tunaviyur S Kesavan, participated as a special guest.
Fine Arts Forum patron Miss Rajitha Sinnadurai Delivered the opening speech of the event.
Lecturer Vel Nandakumar delivered the introductory speech. Robert Devasakayam Suresh, a Trainee of Tamil course, delivered a student speech on the birth of Aadi.

**19.07.2023**
**Wednesday's Assembly**
It was held on Wednesday 19.07.2023 at Rathilakshmi Hall under the leadership of Mr. K. Senthilkumaran, Deputy Principal. at 8:30 am .The event was presided over by Mrs. S.Brinda, a first year English course teacher trainee. Guest Speaker - Mr. Sri Jegaratshagamoorthy Sri Sethuparan Senior Lecturer SLIATE JAFFNA Sri Lanka Institute of Advanced Technological Education (SLIATE). His speech was on artificial intelligence. Ms. Malathy Pathmanathan also delivered the introductory speech. First year English teacher tranee Orima Jelcia also spoke on the topic of Use of Information Technology in the Classroom.

**26.07.2023**
**Wednesday's Assembly**
**a cancer awareness seminar was held at the centenary Wednesday gathering at Kopay Teachers' College.** under the leadership College Principal Laleesan, Jaffna Teaching Hospital onco surgeons Dr. K.Sreetharan and Dr. Thanuja Mahendran delivered the comments. The introductory speech was given by the guest lecturer Mrs. Sivalosani Surenthiran.Mrs Purani Nishanthan, student of Physical Education Course, gave a speech Mr C. Dinesh Kumar hosted the program.

**28.07.2023**
**Sundarar Guru Pooja** — at College Temple Pooja was held today 28.07.2023 Friday 28.07.2023 at Yogalingeswarar Temple located in Kopay Teachers College, courtesy of the students of Physical Education Class A. During this events were held to commemorate Sundarar Gurupooja on Adich Swadi (Wednesday). Lecturer K. Balasanmugan delivered a special speech on the subject of the path shown by Sundarar.

# கலாசாலையில் ஆடிப்பிறப்பு விழா நுண்கலை மன்றத்தினரால் பாரம்பரிய முறையில் முன்னெடுக்கப்பட்டது

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நுண்கலை மன்றம் நடாத்திய ஆடிப்பிறப்பு விழா 17.07.2023 ஆடிப்பிறப்பு நாளன்று பிற்பகல் 2 மணிக்கு கலாசாலை ரதிலக்ஷ்மி மண்டபத்தில் அதிபர் திரு ச.லலீசன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஆறுமுகம் இரகுநாதன் அவர்கள் கலந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினராக சியன தேசிய கல்வியியல் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளரும் எமது கலாசாலையின் பழைய மாணவருமான துணைவியூர் சி கேசவன் அவர்கள் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வின் தொடக்க உரையினை நுண்கலை மன்றக் காப்பாளர் விரிவுரையாளர் செல்வி ரஜிதா சின்னதுரை ஆற்றினார். அதிதி அறிமுக உரையினை விரிவுரையாளர் வேல் நந்தகுமார் நிகழ்த்தினார்..

ஆடிப் பிறப்பு பற்றிய மாணவர் உரையினை தமிழ் நெறியைச் சேர்ந்த ஆசிரிய மாணவன் றொபேர்ட் தேவசகாயம் சுரேஷ் ஆற்றினார்.

இந்நிகழ்ச்சிகளை மாணவர் மன்றத் தலைவர் சுப்பிரமணியம் தனசீலன் தொகுத்தளித்தார். இந்நிகழ்வில் கலந்து கொண்ட யாவருக்கும் பாரம்பரிய முறையில் சிரட்டைகளில் பலாவிலைகளினால் கோலி குடிக்கக்கூடிய வகையில் ஆடிக்கூழ் வழங்கப்பட்டது.

இந்நிகழ்விற்கான அனுசரணையினை விரிவுரையாளர் ரஜிதா சின்னத்துரை அவர்கள் வழங்கி இருந்தார்.











## கலாசாலை ஆலயத்தில் சுந்தரர் குருபூஜை

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் அமைந்துள்ள யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் 28.07.2023 வெள்ளிக்கிழமை உடற்கல்வி A வகுப்பு மாணவர்களின் உபயமாக பூசை இடம்பெற்றது.

இதன் போது ஆடிச் சுவாதி (புதன்) சுந்தரர் குருபூசையை நினைவு கூரும் முகமாக நிகழ்வுகள் இடம் பெற்றன. இந்து மன்ற காப்பாளரும் விரிவுரையாளர் கு. பாலசண்முகன் சுந்தரர் காட்டிய வழி என்ற பொருளில் சிறப்பு உரை ஆற்றினார்.







## கலாசாலை அதிபர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி

இலங்கையிலுள்ள ஆசிரியர் கலாசாலை அதிபர்கள் எண்மர் மற்றும் ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர்கள் 112 பேர் ஆகியோருக்கான தலைமைத்துவ பயிற்சி செயலமர்வு கடந்த 19,20,21 ஆம் திகதிகளில் தொழில்வாண்மை விருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவத்துவதுறை, கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவப் பீடம், தேசிய கல்வி நிறுவகம், மீப்பேயில் ஆசிரிய கல்வி பணிப்பாளர் திருமதி ஸ்ரீமா தசநாயக்கா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஆசிரியக் கல்விக்கான பிரதம ஆணையாளர் டாக்டர் புண்ணியதாஸ தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் பிரசாத் சேதுங்க கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் இலங்கசிங்ஹ முன்னாள் ஆசிரியக் கல்வி பிரதம ஆணையாளர் ரஞ்சித் சந்திரசேகர உள்ளிட்டோர் வளவாளர்களாக பங்கேற்றிருந்தனர். இந்நிகழ்வில் ஓர் அங்கமாக சிறப்பாக செயற்படுகின்ற ஆசிரிய கலாசாலை மற்றும் ஆசிரிய மத்திய நிலையம் என்பவற்றின் தலைவர்கள் முன்மொழியப்பட்டு அவர்களுடைய நிறுவன அபிவிருத்தி அனுபவங்கள் பகிரப்பட்டன. ஆசிரிய கலாசாலைகள் சார்பில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் அதிபர் ச.லலீசன் மற்றும் ஆசிரிய அபிவிருத்தி மத்திய நிலையங்கள் சார்பில் அம்பாறை ஆசிரிய மத்திய நிலையத்தினுடைய முகாமையாளருக்கும் இந்த வாய்ப்பு வழங்கப்பட்டது.





# புதன் 05.07.2023 ஒன்றுகூடலில் அதிதி பேச்சாளர் திரு ந.தெய்வேந்திரராஜா பணிப்பாளர் வடக்கு மாகாண தேசிய பொலிஸ் ஆணைக்குழு ~ கலந்து சிறப்பித்தார்

## தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் மக்களுக்கு என்ன செய்ய முடியும்

கல்வித்துறை அனுபவங்களையும் பொலீஸ் ஆணைக்குழு பற்றிய தெளிவான விளக்கத்தையும் வழங்கிய உரை.

கலாசாலையில் முன்னெடுக்கப்பட்டு வரும் வாராந்த புதன்கிழமை ஒன்றுகூடல் வரிசையில் இம்மாதத்திற்குரிய முதலாவது அதிதி உரையினை 05.07.2023 அன்று எமது அன்பான அழைப்பை ஏற்று கலந்து சிறப்பித்த பொலீஸ் ஆணைக்குழுவின் வட மாகாண பணிப்பாளரும் ஹாட்லிக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபரும் ஓய்வுநிலை யாழ்ப்பாண கல்வி வலயப் பணிப்பாளரும் ஆகிய நடராஜா தேவேந்திரராஜா அவர்கள் வழங்கினார். அவரது உரை தனது கல்வித்துறைசார் அனுபவங்களோடு சிறப்பாக பொலீஸ் ஆணைக்குழு பற்றிய தெளிவை ஏற்படுத்தும் வகையில் அமைந்திருந்தது.

பொலீஸ் ஆணைக்குழு உருவாக்கப்பட்டதன் நோக்கம் அதன் பயன்கள் போன்ற பல விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டதுடன் நிகழ்வின் நிறைவில் விரிவுரையாளர்களும் ஆசிரியர் மாணவர்களும் பொலிஸ் ஆணைக்குழு பற்றிக்கேட்ட பயன்மிக்க கேள்விகள் மூலம் பல விளக்கங்கள் வழங்கப்பட்டன.

தமிழ்நெறியைச் சேர்ந்த ஆசிரிய மாணவி திருமதி திருஷா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அதிதி அறிமுக உரையினை விரிவுரையாளர் வேல் நந்தகுமார் ஆற்றினார்.

இரண்டாம் வருட விசேடகல்வி ஆசிரியர் மாணவி விஜயபாலினி – விசேடகல்வி மாணவர்களை கையாளுதல் என்னும் தலைப்பில் உரையினை வழங்கினார்.









# புதன் 12.07.2023 ஒன்றுகூடலில் அதிதி பேச்சாளர் பண்டிதர் கலாநிதி பொ.செ திருநாவுக்கரசு ஓய்வுநிலை பிரதிஅதிபர் கலந்து சிறப்பித்தார்

## நூற்றாண்டு பாரம்பரியமிக்க கலாசாலை - விசேட உரை

எமது கலாசாலையின் நூற்றாண்டு கால மீள் பார்வையாக ஓய்வுநிலைப் பிரதி அதிபர் பண்டிதர் கலாநிதி பொ.செ திருநாவுக்கரசு அவர்கள் ஆற்றிய உரை அமைந்திருந்தது

கலாசாலையின் புதன்கிழமைகளில் முன்னெடுக்கப்படும் ஒன்று கூடலின் உரைத்தொடர் வரிசையில் 12.07.2023 அன்று எமது கலாசாலையின் ஓய்வுநிலை பிரதி அதிபரும் நாடறிந்த படைப்பாளியும் பண்டிதரும் கலாநிதியுமாகிய பொ.செ. திருநாவுக்கரசு அவர்கள் தனது உடல் நிலையையும் பொருட்படுத்தாது கலந்து சிறப்பித்தார்.

அவர் ஆற்றிய உரை கலாசாலை நூற்றாண்டு காணும் இவ்வேளையில் காலப் பெறுமதி மிக்க உரையாக அமைந்திருந்தது. . பல விடயங்களை ஞாபகப்படுத்தி அவர் உரையாற்றிய விதமும் இடையிடையே நகைச்சுவை கலந்து பேசிய அவரது பேச்சுப் பாணியும் சிறப்பிற்குரியனவாக அமைந்திருந்தன.

முதலாம் வருட விசேட கல்வி ஆசிரியர் மாணவி சப்னா தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. அதிதி அறிமுக உரையை அவரது மாணவரும் எமது கலாசாலையின் தமிழ் பாடநெறி விரிவுரையாளருமாகிய கு. பாலசண்முகன் அவர்கள் வழங்கினார்.

அதிதி கலாசாலை சமூகத்தால் பொன்னாடை போர்த்தியும் மாலை அணிவிக்கப்பட்டும் நூற்றாண்டு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டும் கௌரவிக்கப்பட்டார்.

கலாசாலை அதிபர் தனது உரையில் பண்டிதரது பல்வேறுபட்ட சிறப்புகளை எடுத்துரைத்ததுடன் கலாசாலை வரலாற்றை நூல் வடிவில் எழுதியத்தர வேண்டும் என்று அன்பான வேண்டுகோள் ஒன்றினை விடுத்தார்.

மாணவர் உரையினை முதலாம் வருட ஆரம்பக் கல்வி மாணவி சுதாஜினி - மலாலாவுடன் தொடர்புபடுத்தி பெண் கல்வி பற்றி உரையாற்றினார்

கலாசாலை வரலாறு பற்றிய முழுமையான தரிசனமாக அன்றைய நிகழ்வு அமைந்திருந்தது









# 19.07.2023 ஒன்றுகூடலில் அதிதி பேச்சாளர் திரு ஸ்ரீ.ஸ்ரீசேதுபரன் – சிரேஸ்ட விரிவுரையாளர் (SLIATE JAFFNA) கலந்து சிறப்பித்தார்

## செயற்கை நுண்ணறிவு பற்றிய இயல்பான எளிமையான ஆழமான உரை............

புதன்கிழமை ஒன்று கூடலின் உரைத்தொடர் வரிசையில் 19.07.2023 அன்று சிறப்பு அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் சிரேஸ்ட விரிவுரையாளர் ஸ்ரீசேதுபரன் செயற்கை நுண்ணறிவு என்ற தலைப்பில் இன்றைய காலத்திற்கு தேவையா சிறப்பான உரையொன்று நிகழ்த்தப்பட்டது. செயற்கை நுண்ணறிவு என்றால் என்ன அதன் எதிர்கால முக்கியத்துவம் மற்றும் பயன்பாடுகள், சவால்கள் போன்ற விடயங்கள் பற்றி மிகவும் எளிமையான முறையில் விளக்கங்களோடும் நடைமுறை உதாரண விளக்கங்களோடும் கூடியதாக அவரது உரை அமைந்திருந்தமை சிறப்பு. தனது செயற்பாடுகளை கணனித்திரைமுலம் (Multimedia Presentation) காட்சிப்படுத்தியமை மேலதிக விளக்கதினைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக காணப்பட்டது.

ஹாட்லி கல்லூரியின் பழைய மாணவராகிய அவர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கணினித் துறையில் சிறப்பு பட்டம் பெற்று ஆசிரியராக, விரிவுரையாளராக துறைசார் அறிவை விருத்தி செய்து கொண்ட சிறப்புக்குரியவர். நாடகம், விளையாட்டுத்துறை என்பவற்றிலும் ஆர்வம் மிக்கவர்.

பிரதி அதிபர் திரு க.செந்தில்குமரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வினை முதலாம் வருட ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி திருமதி ச.பிருந்தா முன்னெடுத்துச் சென்றார்.

அதிதி அறிமுக உரையினை எமது கலாசாலையின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப விரிவுரையாளர் செல்வி மாலதி பத்மநாதன் அவர்கள் ஆற்றினார்.

ஆங்கிலநெறி முதலாம் வருட ஆசிரிய மாணவி ஒரிமா ஜெல்சியா அவுட்ஸ்கோன் வகுப்பறையில் தகவல் தொடர்பாடர் தொழில்நுட்பத்தின் பாவனை என்னும் தலைப்பில் ஆங்கில உரை ஒன்றினை சிறப்பாக வழங்கினார்.









**புதன் 28.06.2023 ஒன்றுகூடலில் அதிதி பேச்சாளராக யாழ் போதனா வைத்தியசாலை புற்றுநோய் சத்திர சிகிச்சை நிபுணர்களான வைத்திய கலாநிதி க.ஸ்ரீதரன் , வைத்திய கலாநிதி தனுஜா மகேந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்**

## புற்றுநோய் குறித்த விழிப்புணர்வைத் தந்த வைத்தியர்களின் உரைகள்

எமது கலாசாலையில் முன்னெடுக்கப்படும் வாராந்த ஒன்றுகூடலில் 26.07.2023 அன்று புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றது. இதில் போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் சத்திரசிகிச்சை நிபுணர்களான வைத்தியகலாநிதி க..ஸ்ரீதரன் வைத்தியகலாநிதி தனுஜா மகேந்திரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

புற்றுநோய் என்றால் என்ன என்பது குறித்து ஒரு வினாவை எழுப்பி அதற்குரிய விளக்கங்களை ஆசிரிய மாணவர்களிடம் பெற்று அவர் தனது உரையினை ஆரம்பித்தார். உடற்கலங்களை ஊடுருவும் புற்றுநோயின் நான்கு கட்டங்களை படமூலம் விளக்கம் தந்த அவர். அவை எதனால் ஏற்படுகின்றன என்பது பற்றியும் எம்முடைய கவனயீனம் பற்றியும் எடுத்துரைத்தார்.

அவரைத்தொடர்ந்து பெண் சத்திரசிகிச்சை நிபுணராகிய தனுஜா மகேந்திரன் அவர்கள் பெண்களுக்கு வரக்கூடிய மார்பக மற்றும் கர்ப்பப்பை புற்றுநோய்கள் அவற்றை கண்டறிவதற்கான பரிசோதனைகள் அவற்றை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் போன்ற பல விடயங்களை எடுத்து விளக்கியதுடன், எம் மக்களிடம் இது குறித்து காணப்படும் தவறான மனப்பாங்குகளையும் எடுத்துக் கூறினார்.

அதிதி அறிமுக உரையினை சிரேஸ்ட விரிவுரையாளர் திருமதி சிவலோசனி சுரேந்திரன் அவர்களும் ஆசிரிய மாணவர் சார்பில் கருத்துரையை உடற்கல்விநெறி ஆசிரிய மாணவி திருமதி பூரணி நிஷாந்தனும் ஆற்றினர்.

உடற்கல்விநெறி ஆசிரிய மாணவர் சி. தினேஷ்குமார் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். கருத்தரங்கு தொடர்பான நிறைவுரை ஆற்றிய அதிபர் ச.லலீசன் டாக்டர் ஸ்ரீதரன் யாழ் சென் ஜோண்ஸ் கல்லூரியில் கிரிக்கெட் அணியின் தலைவராக 1995 இல் செயல்பட்டமையும் டாக்டர் தனுஜா வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அணியில் 2005 வலைப்பந்தாட்ட அணியில் விளையாடியமையும் - விளையாட்டு, கல்வி என இரு நிலைகளிலும் சிறப்புற்று விளங்கும் மாணவர்களுக்கு முன்னுதாரணம் எனக் குறிப்பிட்டார்.









# Use of ICT in classroom



**Ms.Orima Jelciya Outschoorn,**

**1 st Year English (2022/23)**

Classroom is a place where learning is produced by effective communication between teacher and students through different media. A class with only textbooks as print media, and verbal information from teacher is now transformed with multimedia tools, computers, internet, digital libraries etc..

Todays' learners learn through constructive activity instead of simply listening to their teachers. These kind of learners require classroom that are flexible, encouraging motivating, supportive of individuality, interactive, fear and anxiety free etc.. These things are provided through ICT. Let us see the concept and meaning of ICT and IT. ICT stands for Information Communication Technology and IT stands for Information Technology. ICT defined as the Technology used to manage information and to aid communication. IT is defined as Technology used to manage information. ICT is a comprehensive term which both IT and CT for effectiveness, efficiency and innovation.

According to UNESCO "ICT is diverse set of technological tools and resources used to transmit, store, create, share or exchange information". Here Tools means PC's, multimedia projector, laptop, notebook, CD's, DVD's still camera, internet, digital videos. These tools are classified into four parts. First one is Information tool, that means application, which provides and collects large amount of information . But we can't gain real life experience through this tool. Second one is situating tool, which provides direct experiences through observation and practice. Simulation gaming, virtual reality are examples of Situating tools. Third one is Constructive tools, which denotes the general purpose tool to construct knowledge, manipulate information and visualize student's comprehension. MS word, Power point presentation are some examples for constructive tools,which helps to increase student's creativity. Final one is communicative tools, as it facilitates communication of ideas, information, knowledge etc. It includes email, and chat.

If these tools influence in the process of teaching and learning, which creates student centered and interactive learning environment. When we consider the benefits of using ICT in the classroom, it helps in providing learning opportunities at any time and at any place.

It increases learners interest in teaching learning process, creates different learning styles, provides equity access in quality education, provides effective communication channel for geographical dispersed learners, customizes programmes as per the individual learners' needs and requirement, provide lifelong learning opportunities, helps in bringing flexibility in teaching and learning, it aids in understanding of difficult concepts and process, helps in enriching learning experiences through multisensory learning, provides opportunity for authentic learning and assessment , encourages interaction and students participation in classroom teaching learning , guides students' learning, makes teaching learning process co-operative enterprises, helps unleashing creativity of learners, create stress free environment etc.

Not only the students but also the school management benefit through ICT. Such as Micro soft applications; MS office helps to prepare exam papers, MS excel helps to enter the progress of students and also we can analyze their marks at once, drawing graphs and chart etc. MS access helps to manage students' data, MS PowerPoint helps to manipulate presentation. Google forms provide online exams. Nowadays schools experience in using aSc timetable software to generate their timetables, fingerprint machines help to reduce problem between management and staff. Some schools have electronic bells which automatically ring according to the time tableschedule. Digital sensors which automatically count the number of people who enter the premises. These are some benefits.

Though there are benefits, we cannot neglect the challenges of using ICT in the classroom. Such as, lack of facilities, materials, equipment and favourable conditions for its usage, ignorance about the uses and advantages of ICT, fear and apprehension among teachers, lack of provisions to train teachers for required ICT skills etc.

We can conclude that, the 21 st century skills include knowledge and attitude. When we use the ICT in classroom, we can create student centered and interactive learning environment.

# நிகழ்வுகளின் தொகுப்பு

## ஆரம்பக் கல்வி விழா





















இப்பத்திரிகை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஊடகக்கழகத்தினால் 01.08.2023 அன்று மின்னிதழாக வெளியீடு செய்யப்பட்டது